பிகள் அரசாங்கத்தை அமைப்பதே அந்தவழியாகும் -ந.ச.ச.கட்சி

09.08.90 டெய்லி நியூஸ்

அம்பாறை மாவட்டத்திலும், அநுராதபுரம் மாவட்டத்திலும் இரு கிராமங்களில் 59 சிங்கள மக்கள் புலிகளால் கொல்லப்பட்டனர்.

10.08.90 வீரகேசரி

பயங்கரவாதத்தை ஒழிக்கும் வரை பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம் என்பவற்றுக்கு இடமில்லை. புலிகளை முற்றாக அழிப்பதே இப்போது எமது நோக்கம் -பாதுகாப்பமைச்சர்

அக்கரைப்பற்றுப் பகுதியில் உள்ள அளிக்கம்பை எனுமிடத்தில் 12 தமிழ்க்குறவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

அம்பாறை திராய்க்கேணியில் இடம்பெற்ற சம்பவத்தில் 90தமிழ் மக்கள் பலியாகியுள்ளனர்.

கண்டிப் பிரதேசத்தில் உள்ள பல்வேறிடங்களில் கடந்த ஒருவாரமாக எரியுண்ட நிலையில் சில சடலங்கள் வீதிகளில் கிடக்கக் காணப்பட்டதாக அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

யாழ்குடாநாட்டில் நாளாந்தம் விமானத் தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. 7 விமானங்கள் தாக்குதலில் ஈடுபடுகின்றன.

வவுனியாவில் நவகமுவ என்ற கிராமத்தைச் சேர்ந்த 8 சிங்களக் கிராமவாசிகள் கொல்லப்பட்டனர். 4 பெண்கள் காயமடைந்தனர்.

ஒலுவில் தமிழ்ப் பகுதியில் இராணுவத்தினரும், முஸ்லீம்களும் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து காரைதீவில் 5 ஆயிரம் தமிழர்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

தற்போது தமிழர்கள் தனி ராஜ்ஜியம் கோருகின்றனர். நாளை முஸ்லீம்கள்தனி ராஜ்ஜியம் கோருமுன்னரே, நாளைமறுநாள் சிங்களவர்கள் தனிராஜ்ஜியம் கோருமுன்னே ஆக்கபூர்வமான சிந்தனை தோன்றட்டும் -ரோட்டறிச் சங்க கூட்டத்தில் குமார் பொன்னம்பலம்

பேருவளை லயன்ஸ் கழகத்தினர் தேசியபாதுகாப்பு நிதிக்கு 5 ஆயிரம்ரூபா நன்கொடை வழங்கியுள்ளனர்.

150 வருடங்களாக நாம் பட்டதுன்பங்களுக்குக் காரணம் நம்மைப் பிழையாக வழிநடத்திய தலைமைதான் என்பதை இன்றைய இளம் தலைமுறையினர் உணரத் தொடங்கிவிட்டனர். நல்ல ஒரு அரசியல் தலைமைதான் இன்றைய முக்கிய தேவை. சந்ததி சந்ததியாக நாம் மலைநாட்டில் வாழ்ந்து வந்தாலும் கூட நமக்கென்று அரை அங்குல நிலம் கூடச் சொந்தமாக இல்லை. நமக்கென்ற மிஞ்சியுள்ள நுவரெலியா பிரதேசத்தில் கூட நாம் அழிந்துகொண்டுதான் வருகிறோம் -மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன்

இன்று நமது பிள்ளைகள் எல்லோரும் நுவரெலியாவில் கிழங்குத் தோட்டத்தில் வேலை தேடிக் கிழுவில் நிற்கிறார்கள். ஒவ்வொரு தோட்டத்திலும் 50பேர் வீதம் முழு மலைநாட்டிலும் இலட்சக்கணக்கான மக்கள் வேலை இழந்துள்ளார்கள். 77க்கு முன் இந்தளவு குடியேற்றங்கள் இருக்கவில்லை. ஆனால் இன்று ஒவ்வொரு தோட்டத்திலும் குடியேற்றங்கள் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன -ம.ம.மு. செயலாளர் காதர்

11.08.90 வீரகேசரி

மன்டூரில் இருந்து நற்பிட்டிமுனைக்குச் சென்ற 7 தமிழர்கள் சவளக்கடையில்வைத்து வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர்.

புலிகள் நகரங்களைவிட்டு வெளியேறிய பின் இராணுவம் பல தமிழர்களைக் கொன்றுள்ளது. திருகோணமலையில் 60 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். செல்வநாயகபுரத்தில் 23 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். சிற்றாறில் 45 பேர், சீனன்வாடியில் 12பேர், தம்பலகாமத்தில் 75பேர் கொல்லப்பட்டுள்ளனர். திருகோணமலையில் தமிழ்ப்பெண்கள் கைது செய்யப்பட்டு மார்புக்கச்சைகள் அவிழ்க்கப்பட்ட நிலையில் இராணுவமுகாமுக்கு அழைத்துச் செல்ல



லப்பட்டனர். நிந்தவூர் கோயிலருகே 70 பேர் எரிக்கப்பட்டிருந்தனர். திராய்கேணியில் 49பேர் கொல்லப்பட்டனர் அக்கரைப்பற்றில் ஒரேநாளில் 37 பேர் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர் -த.வி.கூ. எம்பி மாவை சேனாதிராசா

பணத்தைத் திரட்ட வேண்டும் என்றால் இந்த அரசு எதையும் செய்யத் தயாராயிருக்கிறது. பௌத்த சாசனத்திற்கு என முதன் முதலாக அமைச்சை உருவாக்கியவர்கள் தாங்களே எனப் பெருமை கூறும் இன்றைய ஆட்சியாளர்கள் சூது விளையாட்டுக்களை சட்டபூர்வமானதாக்கி இருக்கிறார்கள். இன்று எங்கு பார்த்தாலும் சுரண்டல் லொத்தரும், சூதாட்டக் குகைகளுமாகவே இருக்கின்றது -அத்தாவுட எம்.பி

வடக்கு-கிழக்கில் உள்ள அகதிகளுக்கு உணவு, மருந்துவகைகளை விநியோகிக்கும் பொறுப்பை சுயாதீன பிரஜைகளிடம் ஒப்படைக்க முடியாது. சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கம், இராணுவம், அதிரடிப்படையினர் ஆகியோரே அவற்றை விநியோகிப்பர் - பாதுகாப்பு அமைச்சர்

யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சிப் பகுதியிலிருந்தும் திருமலை, வவுனியா, கொழும்பு, முல்லைத்தீவு முதலான பிற மாவட்டங்களிலிருந்தும் இடம்பெயர்ந்து வந்துகொண்டிருக்கும் அகதிகள் 42ஆயிரம் பேர் சாவகச்சேரியில் தங்கியிருக்கின்றனர்.

காரைதீவிலும், அக்கரைப்பற்றிலும் தமிழ் மக்கள் பாதுகாப்புப் பிரச்சினை மட்டுமின்றி, பட்டினிச் சாவையும் எதிர்நோக்கியுள்ளனர்.

12.08.90 சன்டே ஒப்சேவர்

யாழ்ப்பாணத்தில் மக்கள் உணவு தேடி ஒவ்வோர் இடமாக அலைந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது. ஆனால் புலிகளால் கொண்டுவரப்பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் மக்களை உணவுக்காகவும் நகரமுடியாமல் பண்ணிவிட்டது - கொழும்பில் ஓர் அரச ஊழியர்

12.08.90 வீக்கென்ட்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வர விரும்புவர்கள் புலிகளின் அலுவலகத்திற்குப் போய் தங்களைப் பதிவு செய்து நம்பர் ஒன்றைப் பெற்றுக் -கொண்டு பத்திரங்களைப் பூர்த்தி செய்துகொடுக்க வேண்டும். விண்ணப்பித்தவரைப் பற்றிய அனைத்து தகவல்களையும் புலிகளின் உளவுப்படை உறுதிசெய்த 2 அல்லது 4நாட்களின் பின்னர் விண்ணப்பித்தவருக்கு யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகிறது -கொழும்புக்கு வந்த யாழ் மக்கள்

12.08.90 வீரகேசரி

புலிகளுடன் முழு அளவிலான போரை நடத்துவதற்காக யாழ்குடாநாட்டிலுள்ள மக்களை வவுனியாவுக்கு அப்புறப்படுத்தும் அரசின் உத்தேச யோசனைக்கு பிரதான மிதவாத தமிழ் அரசியல் கட்சிகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

அம்பாறை சவளக்கடையில் 7பெண்கள் உட்பட 12 தமிழரை முஸ்லீம் ஊர்க்காவற்படையினர் கடத்திச் சென்றுள்ளனர்.

அம்பாறை சென்ட்ரல் முகாம் 15வது கொலனியில் 15 தமிழர்கள் முஸ்லீம் ஊர்க்காவற்படையினரால் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

தமிழ் இனப்பிரச்சினை தொடர்பாக அரசியல் தீர்வொன்றைத் தயாரித்துவரும் 6 தமிழர் கட்சிகள் வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண அமைப்பு, முஸ்லீம் மக்களுக்கு தனியான சுயாட்சி அலகு பற்றிய குறித்து இணக்கம் கண்டுள்ளன.

யுத்தம் ஆரம்பித்த நாளிலிருந்து இதுவரையில் சுமார் 3ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அம்பாறை மாவட்டத்தில் மட்டும் 1,500 தமிழர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஆயுதம் தாங்கிய சில முஸ்லீம் குழுக்களாலும், இன்னமும் திட்டமாக இனங்காணப்படாத சில கொலைகாரக் கோஷ்டிகளினாலும் அப்பாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் செரியகல்லாறு என்ற இடத்தில் 29 தமிழர்கள் வரிசையாக நிற்கவைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். சில இராணுவத்தினர்தான் இந்தக் கொலையைச் செய்துள்ளார்கள். அம்பாறை மாவட்டத்தில் திராய்கேணி என்ற இடத்தில் 40க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சில பெண்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். சமார் 50பேரைக் காணவில்லை. ஆயுதம் தாங்கிய ஒரு முஸ்லீம் குழுதான் இந்தக் காட்டுமிராண்டித்தனமான கொலைகளைச் செய்திருக்கிறது. அலிக்கம்பை என்ற கிராமத்தில் 12 நாடோடி மக்கள் வெட்டிக் கொல்லபட்டுள்ளனர். சவளக்கடைச் சந்தியில் 17 தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டு அவர்களின் உடல்கள் எரிக்கப்பட்டுள்ளன. ஊர்க்காவற் படையினரும், அவர்களுடன் சேர்ந்த சீருடை அணிந்திருந்த சிலரும் இந்தக் கொலைகளைச்செய்துள்ளனர். புலிகளின் வெறித் தனமான கொலைகளுக்குப் பதிலடி என்ற போர்வையில் தமிழர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதன் காரணம் என்ன?- பாராளுமன்றத்தில் மட்டு மாவட்ட எம்.பி. கருணாகரன்

எம்மிடம் ஆயுதங்கள் போதியளவில்உள்ளன மேலும் ஆயுதங்கள் வந்துகொண்டிருக்கின்றன - பாதுகாப்பமைச்சர்

13.08.90 சன்

செங்கலடியில் 5 முஸ்லீம் விவசாயிகள் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அகதி முகாமிலிருந்த 21 தமிழர்கள் முஸ்லீம்களால் கொல்லப்பட்டனர்.

13.08.90 ஐலண்ட்

கிழக்கு மாகாணத்தில் 24 மணித்தியாலத்தினுள் சமார் 200 தமிழர்களும், முஸ்லீம்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

13.08.90 வீரகேசரி

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் அரசியல் கொலைகள், பழிவாங்கல் நடவடிக்கைகள் குறித்து தமிழ், சிங்கள, முஸ்லீம் அரசியற்கட்சிகளின் தலைவர்கள் ஆழ்ந்த கவலையும், வேதனையும் தெரிவித்துள்ளனர்

ஏறாவூரில் கொலைகளுக்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டும். அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன்தான் புலிகள் ஏறாவூர் முஸ்லீம்மக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள்-மு.கா

ஏறாவூரில் 4 முஸ்லீம் கிராமங்களில் நடந்த தாக்குதல்களில் 119பேர்கொல்லப்பட்டுள்ளனர். 60பேர் காயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் 35க்கு மேற்பட்டவர்கள் சிறுவர்கள். புலிகளே இத் தாக்குதல்களை மேற்கொண்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

சம்மாந்துறையிலுள்ள வீரமுனைக் கிராமத்தில் ஆலயமொன்றிலிருந்த தமிழ் அகதி முகாம் ஒன்றின்மீது நடந்த தாக்குதலில் 25 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறையில் 6 முஸ்லீம் விவசாயிகள் ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்றினால் கொல்லப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பல கிராமங்களைச் சேர்ந்த முஸ்லீம்கள் எல்.ரி.ரி.ஈயின் அச்சுறுத்தல் காரணமாக அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

புலிகளைத் துப்பாக்கிக் குண்டுகளால் மாத்திரம் அழித்தொழிக்க முடியாது. அவர்களை மக்களிடம் இருந்து தனிமைபடுத்தவேண்டுமானால் தமிழர்களின் நியாயபூர்வமான அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான அரசியல் தீர்வொன்றை நாம் காணவேண்டும் - மு.கா.தலைவர்

புலிகளுக்கு எதிரான யுத்தம் இப்போது தமிழர்களுக்கு எதிரானதாக திசை திருப்பப்பட்டுவிட்டது. புலிகள் அப்பாவி சிங்கள மக்களையும், முஸ்லீம் மக்களையும் கொலை செய்கிறார்கள். அரசாங்கத்தின் ஆயுதப்படைகள் அப்பாவித் தமிழ்மக்களைக் கொலை செய்கின்றன. புலிகளுக்கும், ஆயுதப்படைகளுக்கும் வித்



தியாசம் என்ன?நிந்தவூர் இந்துக்கோவிலில் 70க்கும் அதிகமான தமிழர்கள் கொலைசெய்யப்பட்டு எரிக்கப்பட்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் இராணுவத்தினர் செய்கிறார்கள். அதைப் பற்றி எதுவும் வெளியாகவில்லை. -த.வி.கூ- எம்.பி. சுரேஸ்

கிழக்கில் திராய்கேணியில் 45 தமிழர்கள் கொலை செய்யப்பட்டபோது அங்கு தொலைக்காட்சி கமராக்களும், பத்திரிகையாளர்களும் விமானத்தில் - கொண்டுசெல்லப்படவில்லை. -த.வி.கூ. எம்.பி பிறின்ஸ்

மன்னாரிலிருந்து 45 தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட படகொன்று நடுக்கடலில் கவிழ்ந்தது. கடலில் இருந்து 5பேர் மீட்கப்பட்டதாயும், ஏனைய 40 பேருக்கும் என்ன நடந்தது எனத் தெரியவில்லையென்றும் இராமேஸ்வரத்துக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குப் பிரயாணத்தை மேற்கொள்பவர்கள் ஒருவழிக்கட்டணமாக 1,000 ரூபா செலுத்திய பின்னரும் ஒருநாள் தாமத கட்டணமாக 100ரூபா வீதம் மினிபஸ்களுக்குச் செலுத்த வேண்டியுள்ளது. இத் தாமதக் கட்டணம் செலுத்தாதவர்களை நடுக்காட்டில் இறக்கிவிட்டு மினிபஸ்கள் யாழ்ப்பாணம் திரும்பிவிடுகின்றன.

நிர்வாணநிலையில் வீடியோப் படத்திற்கு முகம் கொடுத்தவண்ணமிருந்த 5இலிருந்து 13 வயதிற்குட்பட்ட 5 சிறுவர்களும், 5 சிறுமிகளும் நீர்கொழும்பிலுள்ள வீடொன்றிலிருந்து பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளனர். இதில் சம்பந்தப்பட்ட வெளிநாட்டவர் தவிர, ஏனைய சந்தேக நபர்கள் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எமது பிரச்சினைகளின் எந்தவொரு தீர்வும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் செய்யப்பட வேண்டும்- ஈ.என்.டி.எல்.எவ்

இந்தியா எமது அயல்நாடு. எனவே யதார்த்தமாக நாம் செயற்படவேண்டும். இந்தியாவைப் பகைத்துக் கொள்ளக் கூடாது - தினேஸ்

வடக்கிலிருந்து 60சதவீதமான முஸ்லீம்கள் வெளியேறிவிட்டார்கள். எஞ்சியுள்ள 40சதவீதமான முஸ்லீம்களும் அங்கு இருக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வீட்டுக்கு ஒரு ஆணை அல்லது பெண்ணை தருமாறு எல்.ரி.ரி.ஈ.யினர் கேட்கும்போது முஸ்லீம்கள் அங்கு எப்படி வாழ முடியும்?- அபூபக்கர்

14.08.90 ஐலண்ட்

ஊர்க்காவற்படைக்காக 35,000பேர் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு பயிற்சியளிக்கவிருப்பதாக அரசு முடிவு செய்துள்ளது. இவர்கள் வடக்கு-கிழக்கில் காவலில் ஈடுபடுவர்.

15.08.90 வீரகேசரி

வவுனியா-கொறவப்பொத்தானை வீதியில் 13 பேரின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கைகள் பிணைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

செங்கலடி, ஏறாவூர், வீரமுனை ஆகிய பகுதிகளிலுள்ள அனைத்து வீடுகளும் எரிந்து நாசமாக்கப்பட்டுள்ளன.

அக்கரைப்பற்றுப் பகுதியில் 8 முஸ்லீம்களின் சடலங்கள் கிடந்ததையடுத்துபல தமிழ் வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன.

வவுனியா தடை முகாமில் கைது செய்யப்பட்டோர் வாகனத்தில் ஏற்றிச்செல்லப்பட்டு காட்டுப்பகுதியில் வைத்து 16 இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் இச் சம்பவத்திலிருந்து தப்பியோடி வந்தவர் தெரிவித்தார்.

14.08.90 வீரகேசரி

முதூரிலுள்ள அகதி முகாமில் 9 தமிழ் அகதிகள் குறந்தடிகளால் தாக்கிக் - கொல்லப்பட்டுள்ளனர்.

பதவியாவிலிருந்து புல்மோட்டைநோக்கிச் சென்ற லொறியொன்று வழிமறிக்கப்பட்டு அதில் பயணம் செய்த 15 சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர்.

வவுனியா நெடுங்குளத்தில் 18 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தோட்டத் தொழிலாளியும் ஒவ்வொரு தொண்டமானாக மாற்றம் பெறவேண்டும். இவ்வாறு முழு மலையகமும் மாற்றம் பெற்றால் எமது வாழ்வில் புதியுகம் பிறந்துவிடும் — தொண்டமான்

நாம் எல்லோருமே வந்தேறு குடிகள் தான். அப்படியிருக்கும்போது தமிழர்களைப் பழிவாங்கும் நோக்கம் நம்மத்தியில் எழக் கூடாது —மத்திய மாகாண முதலமைச்சர் திசநாயக்க

தோட்டத் தொழிலாளர்களிடமிருந்தும் 'செக் ரோலில்' பாதுகாப்பு நிதி அறவிடப்படுகிறது. அதனை நாம் ஆட்சேபிக்கவில்லை—இ.தொ.க. உபதலைவர்

16.08.90 வீரகேசரி

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடியில் 85 தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டதுடன், 100பேர்வரை காயமடைந்தனர். தமிழ் கெரில்லாக்கள் எனச் சந்தேகிக்கப்படுவோரால் கடந்தசில தினங்களாக தங்கள் சமூகத்தின் மீது நடத்தப்பட்டுவரும் கொலைகளுக்குப் பழிவாங்குமுகமாக முஸ்லீம்கள் இத் தாக்குதல்களை மேற்கொண்டதாக அப்பகுதிவாசிகள் தெரிவித்தனர்.

மன்னாரிலுள்ள அகதிகட்கு வழங்குவதற்காக சர்வோதயத்தால் லொறிகளில் எடுத்துச் செல்லப்பட்ட உணவுப்பொருட்கள் வவுனியாவில் உதவி அரசாங்க அதிபரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

வருடாந்தம் நச்சுத்தன்மை காரணமாக 30 ஆயிரம் மக்கள் இறப்பதாகவும், சுமார் 1இலட்சம் பேர்வரை பாதிக்கப்படுவதாகவும் அரசாங்க வைத்தியசாலை அறிக்கைகள் கூறுகின்றன. அரசின் தாராள பொருளாதாரக் — கொள்கை பலரக இரசாயனப் பொருட்களைக் கட்டுப்பாடின்றி இறக்குமதி செய்ய ஊக்குவித்துள்ளது.

முஸ்லீம் மக்களைப் போலவே தமிழ் மக்களும் படுகொலை செய்யப்படும் இத் தருணத்தில் அரசு ஒருதலைப்பட்சமாக முஸ்லீம் இளைஞர்களுக்கு மாத்திரம் ஆயுதப் பயிற்சியளித்து ஊர்க்காவற்படையாகச் செயற்படுத்த முனைவதைக் கண்டிக்கிறோம்—ஈ.என்.டி.எல்.எவ்.

இலங்கையின் ஐக்கியத்தையும், தன்னாதிக்கத்தையும் பாதுகாக்கும் வீரச் செயலில் ஈடுபட்டுவரும் அரசுக்கும், ஆயுதப் படைகளுக்கும் எமது கட்சி முழு ஆதரவையும் வழங்குகிறது—எக்சத் லங்கா ஜனதா பக்ஷய

தற்போது செங்கலடி, ஏறாவூர், ஆரமுகதான் குடியிருப்பு பகுதிகளில் தமிழ்மக்கள் எவரும் இல்லையென்று அங்கிருந்து வந்த வணபிதா கூறியுள்ளார். அச்சம் காரணமாக 15ஆயிரத்திற்கும் மேலானவர்கள் காடுகளுக்குள் தஞ்சமடைந்துள்ளனர் என அவர் தெரிவித்தார்.

17.08.90 வீரகேசரி

தற்போதைய பிரச்சினையில் இந்தியா உட்பட எந்த நாடும் உரிய வழியில் நிதி மற்றும் உதவிகளை வழங்கினால் அவற்றை நாம் ஏற்றுக்கொள்வோம். ஒலுவில், வீரமுனையில் அகதி முகாமில் தமிழர்கள் தாக்கிக் கொல்லப்பட்டனர் —பாதுகாப்பமைச்சர்

பணப்புழக்கம், காசோலைப் பரிவர்த்தனை எதுவுமின்றி அனைத்து வட பகுதி அரச வங்கிகளும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன.

வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தங்களது வீடுகளைவிட்டு அகதிகளாக வெளியேறி உணவுப்பொருட்கள் எதுவுமின்றி ஜீவமரணப் போராட்டம் நடத்திவருகின்றனர்.

கொரவப்பொத்தானை வீதி 9 ஆம் கட்டைப்பகுதியில் 20க்கும் மேற்பட்ட சடலங்கள் அரைகுறையாக எரிந்தநிலையில் காணப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

17.08.90 சன்

மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் அரசபடைகளினாலும், யாழ்ப்பாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் ஆகாயக் குண்டு வீச்சினாலும், செல் தாக்குதலினாலும் தமிழ்மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். மட்டக்களப்பிலும் ஏனைய எல்லைப்புறக் கிராமங்களிலும் சிங்கள, முஸ்லீம் மக்கள் புலிகளினால் — கொல்லப்பட்டுள்ளனர். மொத்தமாக 4,000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் — மோர்ஜ்



17.08.90 ஐலண்ட்

அரசுடன் இணைந்து ஒத்துழைக்கும் தமிழியக்கங்கள், கட்சிகளிலிருந்தும், அவர்களினால் சிபார்சு செய்யப்பட்டு தெரிவு செய்யப்படுபவர்களுக்கும் ஆயுதப் பயிற்சியளிக்கப்பட்டு விரைவில் தமிழ் ஊர்காவற்படை அமைக்கப்படவிருக்கின்றது.

18.08.90 வீரகேசரி

வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான ரீதியில் அவசியமான மருந்துப்பொருட்கள் மற்றும் மருத்துவ சாதனப் பொருட்களை அனுப்பிவைக்க இந்திய அரசு முடிவுசெய்துள்ளதாக புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் உள்ள பெற்றோல் நிலையத்தின் முன்பாக மண்ணெண்ணெய் வாங்குவதற்காக தினமும் சுமார் 2 ஆயிரம்பேர் வரிசையில் நிற்கின்றனர். எனினும் அனைவருக்கும் இங்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுவதில்லை.

சின்னப்புதுக்குளம் இராணுவ வீதிச் — சோதனை நிலையத்தில் கைதுசெய்யப்பட்ட 18 வவுனியாவாசிகளில் 16பேரின் பிரேதங்கள் பாதையில் கிடந்ததாக வன்னி மாவட்ட எம்.பி. குகனேஸ்வரன் பாதுகாப்பு மந்திரிக்கு எழுதிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளார். வவுனியா எல்லப்பர் மருதன் குளத்தை சேர்ந்த 3 மாணவர்கள் நவகம சிங்களக் கிராம ஊர்க்காவற் படையினரால் கொல்லப்பட்ட சம்பவத்தையும் அவர் மந்திரியின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

தமிழ்க் கிராமங்களைப் பாதுகாக்க தமிழ் ஊர்க்காவற்படை அமைப்பதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தமிழ் அரசியற் கட்சிகளுடன் தொடர்புகொண்டுள்ளார். இப்படையில் சேர்ப்பதற்கென இக்கட்சிகளிடம் பெயர்ப்பட்டியல் கோரப்பட்டுள்ளது.

வவுனியாவில் சந்தைப்பகுதிக்குச் சென்ற அப்பாவி இளைஞர்கள் சுமார் 20 பேர்வரை இராணி மில் ஒழுங்கையில் இராணுவத்தடைமுகாம் ஊடாகச் செல்கையில் காணாமல் போயுள்ளதாகவும் 20க்கு மேற்பட்ட சடலங்கள் கொரவப்பொத்தானை வீதியில் காணப்படுவதாகவும் ஊர்வாசிகள் தெரிவித்துள்ளனர்.

பிபிலை—பசறை வீதியில் மலையகத்தை சேர்ந்த இருவரின் சடலங்கள் துப்பாக்கிச்சூட்டு, கத்திக் குத்துக் காயங்களுடன் காணப்பட்டன.

வடக்கு—கிழக்கு மாகாணங்களில் குடிமக்கள் வாழ்க்கை சீர்குலைந்துள்ளது. அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பித்துள்ளன. 4இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறி தொண்டர் ஸ்தாபனங்களின் தயவில் உயிர் பிழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மோதலில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினரும் குடிமக்களின் அவலம் குறித்து பெரும் உதாசீனம் காட்டி வருகின்றனர் —மோர்ஜ்

19.08.90 வீரகேசரி

வடக்கு, கிழக்கில் சமஷ்டி ஆட்சிமுறை— ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக த.வி.கூ. தென்னிலங்கைக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இனங்களின் உரிமைகளை உண்மையாக வழங்காதவரை இன்றைய பிரச்சினைக்கு முடிவு வராது. வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றம், சிங்களவர் அதிகமாக வாழும் பகுதிகளை தமிழ், முஸ்லீம் பிரதேசங்களுடன் இணைத்தல் ஆகியன உடனடியாக நிறுத்தப்பட்டு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் — மத்திய மாகாணசபை உறுப்பினர்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சிங்கள, முஸ்லீம் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்காத இணக்கப்பாடு எதுவும் அர்த்தமற்றதாகும்— மு. கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

